# டிசம்பர் – 14 – வியாழன்

## புனித சிலுவை அருளப்பர்

## என் கடவுளே! என் அரசே! உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன்: திபா. 145:1

### முதல் வாசகம் : ஏசாயா 41 : 13 – 20

ஏனெனில் நானே உன் கடவுளாகிய ஆண்டவர் உன் வலக்கையைப் பற்றிப் பிடித்து, ”அஞ்சாதே, உனக்குத் துணையாய் இருப்பேன்” என்று உன்னிடம் சொல்பவரும் நானே. ”யாக்கோபு என்னும் புழுவே, இஸ்ரயேல் என்னும் பொடிப்பூச்சியே, அஞ்சாதிரு நான் உனக்குத் துணையாய் இருப்பேன், ”என்கிறார் ஆண்டவர். இஸ்ரயேலின் தூயவரே உன் மீட்பர். இதோ, நான் உன்னைப் புதிய கூர்மையான போரடிக்கும் கருவியாக்குவேன். நீ மலைகளைப் போரடித்து நொறுக்குவாய் குன்றுகளைத் தவிடுபொடியாக்குவாய். அவற்றைத் தூற்றுவாய், காற்று அவற்றை வாரிக்கொண்டுபோம் புயல் அவற்றைச் சிதறடிக்கும் ஆண்டவரில் நீ அகமகிழ்வாய் இஸ்ரயேலின் தூயவரில் மேன்மை அடைவாய். ஏழைகளும் வறியோரும் நீரைத் தேடுகின்றனர் அது கிடைக்கவில்லை. அவர்கள் தாகத்தால் நாவறண்டு போகின்றனர் ஆண்டவராகிய நான் அவர்களுக்குப் பதிலளிப்பேன் இஸ்ரயேலின் கடவுளாகிய நான் அவர்களைக் கைவிடமாட்டேன். பொட்டல் மேடுகளைப் பிளந்து ஆறுகள் தோன்றச் செய்வேன் பள்ளத்தாக்குகளில் நீரூயஅிற்றுகள் புறப்படச் செய்வேன் பாலைநிலத்தை நீர்த் தடாகங்களாகவும் வறண்ட நிலத்தை நீர்ச் சுனைகளாகவும் மாற்றுவேன். பாலைநிலத்தில் கேதுரு மரங்களை வளரச் செய்வேன் சித்திம் மரம், மிருதுச் செடி, ஒலிவ மரம் ஆகியன தோன்றச் செய்வேன் பாழ்நிலத்தில் தேவதாரு மரங்களையும், புன்னை மரங்களையும், ஊசியிலை மரங்களையும் வைப்பேன். அப்போது, ஆண்டவர் தம் ஆற்றலால் இதைச்செய்தார் என்றும் இஸ்ரயேலின் ”தூயவர் அதைப் படைத்தார் என்றும் மக்கள் கண்டு உணர்ந்து கொள்வர் ஒருங்கே சிந்தித்துப் புரிந்து கொள்வர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்

### நற்செய்தி : மத்தேயு 11 : 11 - 15

அக்காலத்தில் இயேசு கூறியதாவது:“மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை. ஆயினும் விண்ணரசில் மிகச் சிறியவரும் அவரினும் பெரியவரே என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். திருமுழுக்கு யோவானின் காலமுதல் இந்நாள் வரையிலும் விண்ணரசு வன்மையாகத் தாக்கப்படுகின்றது. தாக்குகின்றவர்கள் அதைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். திருச்சட்டமும் எல்லா இறைவாக்கு நூல்களும் யோவான் வரும்வரை இறைவாக்குரைத்தன. உங்களுக்கு விருப்பம் இருந்தால் வரவேண்டிய எலியா இவரே என ஏற்றுக்கொள்வீர்கள். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்“ என்றார்

**தியானம்:** இஸ்ராயேல் மக்கள் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இனமாக இருந்தாலும், அவர்களின் கீழ்ப்படியாமையினால் உலகெங்கும் சிதறிக்கப்பட்டார்கள்.. ஆயினும் இறைவன் அவர்களை கைவிடவில்லை. எசாயா இறைவாக்கினா் மூலம் பாா்வோனின் அடிமைத்தனத்திலிருந்து இறைவன் மீட்டாா் என்பதை ஏடுத்துரைப்பதன் மூலமாக இன்றைய முதல் வாசகம் அமைகின்றது. இன்றுவரை இஸ்ராயேல் இனத்தை எவராலும் அழித்துவிட முடியவில்லை. அந்நாட்டிற்கு இறைவன் பக்கபலமாக இருந்து வழிநடத்துவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இயேசுக்கிறிஸ்து யாா்? என்ற கேள்விக்கு சான்று பகிரக் காரணமாய் இருந்தவா் திருமுழுக்கு யோவான். கடவுள் என்றால் யாா்? என்ற கேள்விக்கு தெளிவாகக பதிலளித்தவா். கடவுளுக்கும் மனிதனுக்கும் தடைக்கல்லாக ஒரு பாலம் கட்டப்பட்டிருந்தது. அதனால் மக்கள் கடவுளைளப்பற்றி அறியத் தடுமாறிக் கொண்டிருந்த வேளையில் மனிதனுடைய சாயலும் கடவுளுடைய சாயலும் ஒன்றாக இருந்தது. ஆண்டவா் மைந்தனே மனிதனாக இவ்வுலகிற்கு வந்திருக்கின்றாா் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தினாா். வாழ்க்கை என்பது எப்போதும் நிறைவாக இருப்பதில்லை. நாம் செய்கின்ற பாவத்தின் விளைவுதான் எமக்கு வரும் சோதனைகள். பொன் அக்கினியில் புடமிடப்படுவது போல நாம் விசுவாசத்தில் பலம்பெற இறைவன் எம்மை அழைக்கின்றாா். இருள் வரும் பொழுது நட்சத்திரங்கள் கண்ணுக்குத் தென்படுவதுபோல வாழ்வில் துன்பங்கள வரும் பொழுது பல உண்மைகளை கண்டுணர முடியும். எனவே எவ்வாறு இஸ்ராயேலா் மீண்டும் மீண்டும் பாவத்தில் விழ இறைவன் அவா்களுடன் இருந்தாரோ அதேபோன்று எங்களுடன் இருப்பாா் என்று விசுவசிப்போமாக.